# இலக்கியத்தில் மனித நேயம்

*முனைவர் அ. ஜாஸ்பின் ஷீலா*
உதவிப் பேராசிரியர்
கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மார்ச்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.14958683

## முன்னுரை

மனிதநேயம் என்ற சொல் பொருளாழமிக்கது. மனிதப்பற்று, மனிதாபிமானம், மானிடப்பற்று, மனிதநாட்டம், மனிதத்தன்மை, போன்ற பல சொற்களால் வழங்கப்படுகிறது. மண்ணில் வாழும் மனித உயிர்களிடம் ஒருவர் செலுத்துகின்ற அன்பு, கருணை, நட்பு, இரக்கம் போன்றவற்றை உள்ளடக்கியது. மனித நேயம் ஒரு மனிதன் சகமனிதனின் துன்பத்தைக் கண்டு மனம் வருந்தி, துன்பப்படுபவர்களுக்கு உதவி செய்தல் மற்ற உயிர்களுக்கு துன்பம் அளிக்காமல் இருத்தல், துன்பப்படும் உயிர்களின் துன்பத்தைப் போக்குதல். இளகிய இதயமும், இரக்க மனமும் கொண்ட உறுதியான செயல்களை உள்ளடக்கியது.

தன்னை நாடி வந்தவர்களுக்குத் தன்னிடம் உள்ள பொருள்களைக் கொடுத்து உதவும் மனப்பான்மை ஈகையாக வளர்ந்தன. பிறருக்குக் கொடுப்பதற்காகவே பொருள் தேடும் வாழ்க்கை முறை மனித நேயம் ஆகும். நாட்டை ஆளும் திறமை பெற்ற மன்னர்களின் சிறப்பான கொடைத்தன்மை, நீதி, தண்டனை போன்றவையாகும்.

இக்கட்டுரையானது தன்னிகரிலாத் தமிழ் மொழியில் ஆயிரம் ஆண்டு களாக அழியாத செல்வங்களாக விளங்கக்கூடியதும் அறநெறிகளைப் போதிக்கும் போதிமரங்களாக நிலைத்து நின்று வாழ்ந்து கொண்டிருக்கும் சங்க இலக்கிய நூல்களின் பாதைகளிலும் மனித சமுதாயத்தின் ஆணிவேராகிய மனிதநேயக் கருத்துகளை உள்ளடக்கங்களாகக் கொண்ட நவீன இலக்கிய வலைதளங்கள் வாயிலாகவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மனிதநேயம்

மனிதனுக்குரிய உயரியப் பண்புகளில் ஒன்று மனிதநேயமாகும். மனிதநேயம் என்பது பிறருக்காக வாழ்தலும், பிறர் துன்பம் அடையும் போது உதவுதலுமாகும். நாடு, மொழி, இனம், என்று வேறுபாடு கருதாது எல்லோருக்கும் எல்லாம் பொதுவானது என்று வாழ்வதே மனிதநேய வாழ்வாகும். ‘மனிதநேயம்’ என்ற சொல் மனிதர்களிடையே காணப்படும் நேயத்தைச் சுட்டுவதாகும். நேயம், நேசம் என்ற சொல்லுக்கு ‘அன்பு’ என்று தமிழ் பேரகராதி பொருள் தருகிறது. உயிர்களின் மீது இரக்கம் கொள்ளும் அன்பு என்பது மனிதநேயத்தில் முக்கியமானதாக அமைகின்றது. “அன்பின் வழியது உயிர்நிலை” என்னும் வள்ளுவரின் வாக்கும் மனிதநேயத்தைக் குறிப்பதாக அமைகின்றது.

### போரில் மனித நேயம்

வினையே ஆடவர்க்குயிதே என்பதற்கிணங்க மன்னர்களுடன் மக்களும் இணைந்து போரிட்டனர். போர் தொடங்குவதற்கு முன்னர் போர்ச் செய்தியை முரசறைந்து தெரிவிப்பர். பசு, பத்தினிப் பெண்டிர், பிணியுடையோர், மக்கட்பேறு அற்றோர் ஆகியோரைப் பாது காக்கும் நிலை காணப்பட்டது.

**ஆவும் ஆனியற் பார்ப்பன மக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறா அதிரும்**
**எம்மன்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்**

*(புறம் 9.1-5)*

இவ்வாறு பழந்தமிழர் செய்த போரோ மனித நேயப்போர் எனலாம்.

படைவீரர்கள் ஒழுங்கு கூடித் தங்கியிருந்த கடல்போன்றலிபாசறையிலிருந்துநீங்கிச்சென்று வேல் முதலிய படைகளைக் கைக் கொண்டு எதிர்த்து வருபவர் உறைவினரென்றும், பிறரென்றும் பாராமல் கை கலந்து போர் செய்தனர். தன்னை எதிர்த்துப் போரிட வரக்கூடியவர் உறவினராக இருப்பினும் தன்நாட்டு நலனைக் கருத்தில் கொண்டு போர் புரிந்து மன்னனுக்கும், நாட்டுக்கும்பெருமைசேர்த்தனர்என்பதிலிருந்து போர் வீரர்களின் நடுநிலைமை எடுத்து உரைக்கப்படுகிறது.

பழந்தமிழ் மன்னவரும் மக்களும் நம்மினும் வலிமை குறைந்தவரோடு போர் செய்வதில்லை. அவ்வாறு வலிமை குறைந்தவனோடு போர் புரிதல் இழுக்கு என்று கருதினர்.

**எறியா தெறிதல் யாவண தெறிந்தோர்**
**எதிர்சென் றெறிதலுஞ் செல்லானதனால்**

*(புறம். 301.8-9)*

### கொடை சிறப்பில் மனித நேயம்

அரசர்களும் குறுநில மன்னர்களும் கலைஞர் தங்களைக் காணவரும் போது அவர்கள் வறுமை நிலையை அறிந்து அழுக்கான கிழிந்த-தைக்கப் பெற்ற ஆடையை நீக்கிப் புதிய ஆடைகளை தருவான் மன்னன் இதனை,

**ஈரும் பேனும் இருந்து இறைகூடி**
**வேரொடு நனைந்து வேற்றுஇழை நுழைந்த**
**அரவுஉரி அன்ன, அறுவை நல்கி**

*(பெ.பா.79-83)*

என்ற பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

புலவர்கள் வந்தவுடன் களைப்பு நீங்குவதற்கு உணவு அளித்து மகிழ்ந்தார்கள் மன்னர்கள். பழங்காலத்தில் வந்தவர்க்கு மயக்கம் தராத, களைப்பைப் போக்கும் சுவை நீரைக் கொடுத்தனர்.

**மழை என மருளும் நீக்கி, தூய**
**கொட்டைக் கரைய பட்டுஉடை நல்கி**

மன்னனை சந்திப்பதற்கு முதல் நாள் மாலை மிகுந்த வறுமையில் இருந்தேன். சந்தித்த பிறகு அனைவரும்கண்டு வியக்கும் அளவுக்கு எங்களை உபசரித்தார். இந்த நிகழ்வுகள் அனைத்தும் கனவுகள் என நினைத்தனர் புலவர்கள். அரசர்கள் எங்களைத்தூரத்தில்பார்த்தபோதேஎழுந்துவந்து வரவேற்றார். காலம் அறிந்து உணவு கொடுத்தார் என இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

**அகறிரோ எம் ஆயம்விட்டு என,**
**சிரறியவன் போல் செயிர்த்த நோக்கமொடு,**
**என் அறித அளவையின் வேண்டுமுகந்து கொண்டு**
**இன்மைதீர வந்தனென்**

*(பொ.ஆ.123-129)*

என்னை விட்டு விரைவாக அகன்று, ஊர் செல்ல விரும்புகின்றீரா என்று அரசன் புலவரை பார்த்து கேட்க, யானைக் கன்றுகளையும், பெண் யானைகளையும், பல வகைப்பரிசில் பொருள்களையும் கொள்க எனத் தந்தான் அரசன்.

எங்கள் குறைகள் நீங்கும் அளவில் வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு வறுமை தீர வந்து சேர்ந்தோம் என்று கூறினார்கள் புலவர்கள் என்பதை இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

"தாள்நிழல் மருங்கின் அணுகுபு குறுகித்
தொழுது முன்" நிற்குவிர் ஆயின், பழுதுஇன்று,
கோட்டைக் கரைய பட்டு உடை நல்கி

கரிகாலனை பணிந்து உதவிகள் அனைத்தையும் செய்வான் அவனுடைய பார்வை கன்றைப் பெற்ற பசு பார்க்கின்ற பார்வை போன்று மிகவும்

விருப்பத்தோடும் அன்போடும் பார்ப்பான். தகுந்த உணவு,உடை,பொன் பொருட்கள் அனைத்தையும் தந்து வழி அனுப்புவான் என்று இப்பாடல் அடிகள் விளக்குகின்றன.

தக்க சமயத்தில் உதவுதல், நண்பனுக்குத் துயரம் வந்த வழி உதவுதல், உயிரை கொடுக்கும் சூழ்நிலைவரினும் அதையும் செய்தல் ஆகியவை மிகச் சிறந்த நட்பினுடைய இலக்கணம் என்பதை,

**"உலந்துழி உலக்கும் நெஞ்சறி துணையே"**

இப்பாடல் அடிகள் மூலம் அறியலாம்.

மிகச் சிறந்த வீரனாக இருப்பவன் தன் பகைவர்களுக்கு நெருங்க முடியாத தொலைவில் இருப்பான். அதே நேரம் நண்பன் என்ற நிலையில் நினைக்கும் போது நெருங்கி இருபவனாக தோன்றும் என்பதை,

**"துப்புஎதிர்ந் தோர்க்கே உள்ளாச் சேய்மையன்**
**நட்பு எதிர்ந் தோர்க்கே அங்கை நன்மையன்"**

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

சான்றோர்கள் பழிக்கு அஞ்சும் இயல்பு உடையவர்கள். தனக்குப் புகழ் தரும் செயல்கள் எனில் உயிரையும் கொடுக்கத் துணிவர் அதே நேரம் பழி வரும் செயல்களை உலகையே பெறுவதாக இருந்தாலும் செய்யாத இயல்புடையவர்கள். பொய்மை கலந்த நட்பு என்றுமே துன்பம் தரக்கூடியது என்பதை,

**"உயிர் ருலை உலகம் அமிழ்தொடு பெறினும்**
**கொய்சேன் நீங்கிய வாய் நட்பினையே"**

இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

### பொருள் ஈட்டலிலும் ஈதலிலும் மனிதநேயம்

**"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை"**

என்பதற்கிணங்க தலைவியைப் பிரிந்து தலைவன் பொருள் ஈட்டச் செல்வது தேடிய பொருளைக் கொண்டு அறச் செயல்கள் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான், தம்மிடம் இரந்து வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாது கொடுக்க வேண்டும் என்று எண்ணினார் என்பதை

**இரந்தோர்க் கொன்றீயாமை இழிவென**
**மலை இறந்து செயல் சூழ்ந்த பொருள்**
**இல்லென இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவெனக்**
**கல்லிறந்து செயல் சூழ்ந்து பொருள் பொருளாகுமோ**

***(கலி.4-1)***

என்று கலித்தொகை மனிதநேயப் பண்பு மேலோங்கி இருப்பதை உணர்த்துகிறது.

செல்வத்தை தமக்கென சேர்த்து வைக்காமல் பிறர்க்கு ஈதல் வேண்டும். தாமே அனுபவிக்க நினைத்தால் வீணாகப் போகும் என்பதை

**செல்வத்துப் பயனே ஈதல்**
**துய்ப்போம் எனினே தப்புந பலவே**

***(புறம்.189(7-8))***

என்னும் புறநானூற்றுப் பாடலடி ஈதலின் சிறப்பை விளக்குகிறது.

### பொது நலனில் மனித நேயம்

சங்க தமிழர்கள் அக வாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் தம் இருகண்களாகப் போற்றினர். பட்டினப்பாலை புகார் மக்களின் பகையறியா வாழ்க்கையை எடுத்துரைக்கிறது. மக்கள் கள்ளங்கபடமற்ற நெஞ்சினராக விளங்கினர்.

**விலங்குபகை அல்லது கலங்குபகை அறியா**
**கொழும் பல்கடிச் செழும் பாக்கத்தூர்**
**குறும் பல் ஊர் நெடுஞ்சோணாட்டு**

***(பட்.பாலை: 26-28)***

என்ற பாடல் இதனை எடுத்துரைக்கிறது.

அரசன் மக்களை வளமாக வைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்ததை பட்டினப்பாலை கூறுகிறது. மக்கள் வளமாக வாழ்வதற்காகக் காடு களை அழித்து, அதை விளை நிலங்களாகவும், ஏரிகளையும் குளங்களையும் வெட்டி நீர்வளமாகவும் மாற்றினான். கோயில்கள் கட்டி, கோயிலைச் சுற்றிலும் மக்களை குடி அமரச் செய்தான். இவ்வாறு மக்களின் நல்வாழ்விற்கு வழி செய்தான். இதனை,

**காடுகொன்று நாடு ஆக்கி**
**குளந் தொட்டு வளம்பெருக்கி**
**பிறங்கு நிலை மாடத்து உறைந்த போக்கி**
**கோயிலொடு குடிநிறீஇ**

***(பட்.பாலை:283-286)***

என்ற பாடலடிகள் கூறுகின்றன.

### அன்பே மனிதநேயம்

அன்பு என்பது விலைமதிக்க முடியாத அணிகலன், உயர்ந்த பண்பு, அன்புதான் உலகின் அச்சாணி, "அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே" என இறைவனை வள்ளலார் போற்றுகிறார்.

**"அன்பைத்தான் நாம் சரியாகப் புரிந்து**
**கொள்ளவில்லையே, புரிந்து கொண்டால்**
**இந்த உலகமே சொர்க்கமாகிவிடும்.**
**வரம்பில்லா வலிமை பெற்ற மனிதன்,**
**மனிதநேயம் என்ற மகுடம் சூடும்போது**
**வைரமாய் மிளிர்கிறான்."**
***(டாக்டர்.கமலிஸ்ரீபால், மனிதநேயம்,ப-20).***

### முடிவுரை

விலங்கில் இருந்து மனிதனை உயர்த்துகிற பகுத்தறிவின் நோக்கம் அறிவை உணர்ந்து செயல்படுதலில் மட்டுமில்லை. மற்றவரது தேவையை, நியாயத்தை, அறத்தை, துன்பத்தைப் புரிந்து, உணர்ந்து அதைக் களைய முற்படுகிற பரந்த மனதிலும் இருக்கிறது. மனித நேயத்தின் பல்வேறு வெளிப்படுத்துதலை சங்க இலக்கியப் பாடல்கள் சான்றாக எடுத்துரைக்கின்றன.

### துணை நின்ற நூல்கள்

1. சங்க இலக்கியம் பொருநர் ஆற்றுப்படை பெரும்பாணாற்றுப் படை - ச.வே. சுப்பிரமணியம்
2. புறநானூறு - அ.விசுவநாதன்
3. மனிதநேயம் - டாக்டர். கமலி ஸ்ரீ பால்